மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—மதுரை-காமராசர் பல்கலைக் கழக ''1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/79) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட-முன்வடிவின் உரிய பகுதி களாக ஆக்கப்பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்டமுன் வடிவின் உரிய பகுதிகளாக ஆக்கப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே ''1979-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/79) சட்டமாக நிறை வேற்றப்பெறவேண்டும்

என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

[முற்பகல் 11-50]

2, அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(உ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பேறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன் வடிவை பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS